செய்தி வெளியீடு எண் :57 நாள் :30.06.2020

**தேனி மாவட்டம்.**
**கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை**
**தொற்றா நோய்களுக்கான சிறப்பு நல்வாழ்வு மருத்துவ முகாம்.**

கொரோனா தொற்று பரவுதலை கட்டுப்படுத்தும் வகையில் தேனி மாவட்டத்தின் கிராம புறங்களில் வசிக்கும் வயது முதியோர்களின் உடல் நலனை பேணும் வகையிலும் தொற்றா நோய்களுக்கான தொடர் சிகிச்சை மேற்கொண்டு வரும் வயோதிகர்கள் குறிப்பாக சர்க்கரை நோய், இரத்தக்கொதிப்பு, இருதய நோய், சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய் தொடர்பாக மருத்துவ சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் உடல்நிலையினை காலமுறை பரிசோதனை மேற்கொள்ளும் வகையில் கிராமபுறங்களில் சிறப்பு மருத்துவ முகாம் நடத்த மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு மருத்துவ முகாம் வயது முதியோர்கள் மற்றும் தொற்றா நோய்களான சர்க்கரை, இரத்தக்கொதிப்பு, இருதய நோய் போன்றவற்றிற்கு தொடர் சிகிச்சை மேற்கொண்டுவரும் நபர்களுக்கு சிறப்பு மருத்துவ கவனிப்பு மற்றும் ஆலோசனைகள் அளிக்கும் வகையில் முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. கொரோனா தொற்று பரவி வரும் இக்காலகட்டத்தில் வயது முதியோர் மற்றும் தொற்றா நோய் கண்டுள்ள நபர்கள் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான மருத்துவ ஆலோசனைகள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் முகாம் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு முகாம்கள் தவிர ஆரம்ப சுகாதார நிலையங்களில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் புறநோயாளிகளுக்கான சிகிச்சை, தொற்றா நோய்களுக்கான சிகிச்சை மற்றும் தொடர் பரிசோதனைகளை பொதுமக்கள் வழக்கம் போல் பெற்று பயனடைய கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் இந்த தொற்றா நோய்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் தொடர்ச்சியாக ஜுலை மாதம் முழுவதும் வட்டார மருத்துவ அலுவலரால் தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களில் அமைந்துள்ள அங்கன்வாடி மையங்கள் மற்றும் பள்ளிகளில் முகாம் நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது. ஜுலை மாத முதல் வாரத்தில் இணைப்பில் கண்டுள்ள இடங்களில் முகாம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து வரும் நாட்களில் முகாம் நடைபெறும் இடங்கள் மற்றும் நேரம் ஆகிய தகவல்கள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் மூலம் முகாம் நடைபெறும் நாட்களுக்கு முன்னதாக தகவல் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே வயது முதியோர்கள் மற்றும் தொற்றா நோய் சிகிச்சை பெறுபவர்கள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த சிறப்பு முகாமில் கலந்து கொண்டு மருத்துவ சிகிச்சை மற்றும் ஆலோசனைகள் பெற்று பயனடையுமாறு தேனி மாவட்ட ஆட்சியர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப.. அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**

| வ. எண் | நாள் | ஊராட்சி ஒன்றியம் | | |
|---|---|---|---|---|
| | | ஆண்டிபட்டி | போடிநாயக்கனூர் | சின்னமனூர் |
| 1 | 01.07.2020 | பந்துவார்பட்டி, கலைவாணர் பள்ளி ஆண்டிபட்டி, கொத்தபட்டி, தர்மத்துபட்டி | ------- | ------- |
| 2 | 02.07.2020 | சிலோன் காலனி, திருமலாபுரம். மேலத்தெரு, ஆண்டிபட்டி. கண்ணியப்பபிள்ளைபட்டி, அணைக்கரைபட்டி | பத்தரகாளிபுரம், மணியமபட்டி, சிலமரத்துபட்டி, விஸ்வாசபுரம், குரங்கனி கொழுக்குமலை | ஓடைப்பட்டி, எரசக்கநாயக்கனூர், சின்னபொட்டிபுரம், புலிக்குத்தி, எஸ்.தாம்த்துப்பட்டி சின்னமனூர் நகர்ப்புறம் வார்டு 1 முதல் 5 |
| 3 | 03.07.2020 | G. உசிலம்பட்டி., நடுத்தெரு, ஆண்டிபட்டி. பாலகோம்பை. T. ராஜகோபாலன்பட்டி. | சாலிமரத்துப்பட்டி, சூலப்புரம்,சிலமரத்துபட்டி, விஸ்வாசபுரம், கொட்டக்குடி, | ஓடைப்பட்டி, எரசக்கநாயக்கனூர், குப்பனாசாரிபட்டி, கே.துரைசாமிபுரம், சின்னமனூர் நகர்ப்புறம் வார்டு 1 முதல் 5 |
| 4 | 04.07.2020 | கணேசபுரம். நடுத்தெரு. ஆண்டிபட்டி. வண்டியூர், சிலுக்குவார்பட்டி. | சாலிமரத்துப்பட்டி, சிலமலை,சிலமரத்துபட்டி, பொட்டல் கலம்,முத்தம் சாலப்பாரை | ஓடைப்பட்டி, எரசக்கநாயக்கனூர், குப்பனாசாரிபட்டி, குச்சனூர், சின்னமனூர் நகர்ப்புறம் வார்டு 1 முதல் 5 |
| 6 | 06.07.2020 | குன்னூர், ஜக்கம்பட்டி, பிச்சம்பட்டி, ரெங்கசமுத்திரம். | மஞ்சிநாயக்கன் பட்டி, சிலமலை, சிலமரத்துபட்டி, மீனாட்சி புரம்,போடிமெட்டு, | தென்பழனி, கன்னசேர்வைபட்டி, முத்துகிருஷ்ணாபுரம், பொட்டிபுரம், இராமகிருஷ்ணாபுரம், குச்சனூர், சின்னமனூர் நகர்ப்புறம் வார்டு 1 முதல் 5 |
| 7 | 07.07.2020 | அம்மச்சயாபுரம், ஜக்கம்பட்டி, கோத்தலூத்து, ஜம்புலிபுத்தூர். | கெப்புரங்கன்பட்டி, சிலமலை, மேலசுக்கநாதபுரம், மீனாட்சி புரம், முந்தல் | மூர்த்திநாயக்கனப்பட்டி, கன்னசேர்வைபட்டி, முத்துகிருஷ்ணாபுரம், பொட்டிபுரம், இராமகிருஷ்ணாபுரம், குச்சனூர், சின்னமனூர் நகர்ப்புறம் வார்டு 1 முதல் 5 |

| வ. எண் | நாள் | ஊராட்சி ஒன்றியம் | |
|---|---|---|---|
| | | கம்பம் | க. மயிலாடும்பாறை |
| 1 | 01.07.2020 | ------- | ------- |
| 2 | 02.07.2020 | சாமண்டிபுரம், மஞ்சக்குளம், திருவள்ளுவர் காலனி, க.புதுப்பட்டி-1, கே.கே.பட்டி-1 | தேக்கம்பட்டி, மீனாட்சிபுரம், பழனிதேவன்பட்டி, முத்துரெங்காபுரம், பொன்னம்மாள்பட்டி, அடைக்கம்பட்டி, ஆத்துக்காடு, ஏழாயிரம்பண்ணை |
| 3 | 03.07.2020 | கம்பம் நகர்ப்புறம் வார்டு 2 அண்ணாநகர், பட்டாளம்மன்கோவில் தெரு, க.புதுப்பட்டி - 1, கே.கே.பட்டி-2 | சமத்துவபுரம், எட்டப்பராஜபுரம், வேலாயுதபுரம், கண்டமனூர் |
| 4 | 04.07.2020 | பலியன்குடி, ஊமையன்தேவர்தொழு, தேக்கடி, சுருளியார்மின்நிலையம், கே.கே.பட்டி-2, க.புதுப்பட்டி - 2 | கண்டமனூர் |
| 6 | 06.07.2020 | லோயர்கேம்ப், க.புதுப்பட்டி - 2, கே.கே.பட்டி-3 | கடமலைக்குண்டு, மேலப்பட்டி |
| 7 | 07.07.2020 | கீழ்கூடலூர் - 1, க.புதுப்பட்டி -2, கே.கே.பட்டி - 3 | கடமலைக்குண்டு, அய்யனார்புரம், கே.கே.புலியூர், தேவராஜ்நகர், |

| வ. எண் | நாள் | ஊராட்சி ஒன்றியம் | | |
|---|---|---|---|---|
| | | பெரியகுளம் | தேனி | உத்தமபாளையம் |
| 1 | 01.07.2020 | ------- | ------- | ------- |
| 2 | 02.07.2020 | G. கல்லுபட்டி, பெரியகுளம் நகராட்சி - 1,2,3 | அரண்மனைபுதுார், முல்லைநகர், அம்பாசமுத்திரம், கோபாலபுரம், காட்டுநாயக்கன்பட்டி, ஜங்கால்பட்டி, சமத்துவபுரம். | கோம்பை - 1, ஆனைமலையான்பட்டி, தேவாரம், டி.சிந்தலைச்சேரி, பி.பொம்மிநாயக்கன்பட்டி |
| 3 | 03.07.2020 | G. கல்லுபட்டி, | அரண்மனைபுதுார், முல்லைநகர், அம்பாசமுத்திரம், கோபாலபுரம், காட்டுநாயக்கன்பட்டி, ஜங்கால்பட்டி, சமத்துவபுரம். | கோம்பை - 1, ஆனைமலையான்பட்டி, தேவாரம், டி.சிந்தலைச்சேரி, பி.பொம்மிநாயக்கன்பட்டி |
| 4 | 04.07.2020 | கெங்குவார்பட்டி | அரண்மனைபுதுார், முல்லைநகர், அம்பாசமுத்திரம், கோபாலபுரம், காட்டுநாயக்கன்பட்டி, ஜங்கால்பட்டி, சமத்துவபுரம். | கோம்பை - 1, ஆனைமலையான்பட்டி, தேவாரம், டி.சிந்தலைச்சேரி, பி.பொம்மிநாயக்கன்பட்டி |
| 6 | 06.07.2020 | கெங்குவார்பட்டி | அரண்மனைபுதுார், முல்லைநகர், அம்பாசமுத்திரம், கோபாலபுரம், காட்டுநாயக்கன்பட்டி, ஜங்கால்பட்டி, சமத்துவபுரம், உப்பார்பட்டி, லட்சுமிபுரம் | கோம்பை - 1, ஆனைமலையான்பட்டி, தேவாரம், டி.சிந்தலைச்சேரி, பி.பொம்மிநாயக்கன்பட்டி |
| 7 | 07.07.2020 | காமக்காபட்டி. அம்சாபுரம். கோட்டார்பட்டி, மீனாட்சிபுரம், பாலபட்டி, புஷ்பராணிநகர், செங்குளத்துபட்டி, ஸ்ரீராம்நகர் | அரண்மனைபுதுார், முல்லைநகர், அம்பாசமுத்திரம், கோபாலபுரம், காட்டுநாயக்கன்பட்டி, ஜங்கால்பட்டி, சமத்துவபுரம், கோட்டைபட்டி, அய்யணார்புரம், பாலகிருஷ்ணபுரம். மரியாயிபட்டி, பள்ளபட்டி, சமத்துவபுரம், உப்பார்பட்டி, கருப்பதேவன்பட்டி, நாராயணபுரம், சோலைதேவன்பட்டி, லட்சுமிபுரம் | கோம்பை - 1, ஆனைமலையான்பட்டி, தேவாரம், டி.சிந்தலைச்சேரி, பி.பொம்மிநாயக்கன்பட்டி |